**Secretarial Section**
Head Office, 57- V.E. Road,
Thoothukudi – 628 002.
☏: 0461-2325136
**e-mail : secretarial@tmbank.in**
**CIN: L65110TN1921PLC001908**

Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

Ref.No.TMB.SE.142/2025-26

04.02.2026

The Manager
National Stock Exchange of India Ltd,
Exchange Plaza, 5th Floor, Plot No. C/1,
'G' Block, Bandra - Kurla Complex,
Bandra (East), Mumbai - 400 051.

The Manager
Bombay Stock Exchange limited,
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai – 400 001.

**Ref: Symbol: TMB / Scrip Code: 543596**

Dear Sir/Madam,

**Sub: Press Release – Q3 Results**

Pursuant to Regulation 30 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we are enclosing the Press Release made by the Bank titled – **"Unaudited Financial Results of the Bank for the Quarter Ended December 31, 2025"**

Kindly take the information on record.

Yours faithfully,
**For Tamilnad Mercantile Bank Limited**

SWAPNIL ASHOK YELGAONKAR
Digitally signed by SWAPNIL ASHOK YELGAONKAR
Date: 2026.02.04 18:40:02 +05'30'

**Swapnil Yelgaonkar**
**Company Secretary & Compliance Officer**

Regd. Office
57, V.E. Road,
Thoothukudi - 628 002

**Tamilnad Mercantile Bank Ltd.,**
**Head Office, Thoothukudi**

## PRESS RELEASE

Date: 04.02.2026
Place: Thoothukudi

## Unaudited Financial Results of the Bank for the Quarter Ended December 31, 2025

Tamilnad Mercantile Bank Ltd (TMB) one of the renowned Old Private Sector Banks, having its headquarters in Thoothukudi has a long-cherished history of 104 years of eventful existence with strong fundamentals and an enviable track record of continuous profit making in the industry.

TMB is having Pan India presence with 614 branches (as on 31.01.2026) and 12 Regional Offices across 17 states and 4 Union Territories and serves more than 5.3 million satisfied customers.

The Board of Directors of Tamilnad Mercantile Bank Ltd has approved the Unaudited Financial Results of the Quarter Ended December 31,2025 in their meeting held at Thoothukudi on 04.02.2026. Shri. Salee S Nair, Managing Director and CEO of the bank declared the results. Executive Director, Chief Financial Officer, Executive Vice Presidents and other senior officials of the Bank were also present in the event.

Shri. Salee S Nair, MD & CEO, Tamilnad Mercantile Bank Ltd said, “Our Q3 FY26 performance reinforces the progress we are making in a year focused on building long term capability and scalable growth. The bank delivered healthy growth in advances and deposits, with resilience in profitability and continued strength in asset quality, reflecting disciplined execution across the organisation. MSME lending remains a core growth driver for us. During the quarter, we saw improving momentum in MSME credit, supported by stronger engagement in trade linked and manufacturing clusters. Developments around the US India trade engagement are constructive for export oriented MSMEs, particularly in sectors such as textiles, engineering and electronics, where Tamil Nadu has a strong presence. We are seeing early signs of improved demand for working capital, trade finance and forex solutions from these enterprises. Our ongoing technology transformation is beginning to translate into operational benefits. The integration of advanced digital lending platforms and enterprise systems, including Oracle based solutions, is improving turnaround times, risk assessment and productivity, while enhancing the customer experience. Looking ahead, our focus remains on sustainable credit growth, deepening MSME relationships, improving operating leverage and deploying capital efficiently as we move from a transformation phase into a stronger growth cycle in FY27.”

The Bank continues to post strong performance in all fundamental parameters.

## Bank's Performance Highlights (Year on Year)

- Total Business grew by 14.28% YoY basis, Total business has increased to **₹1,07,470** crores (PY **₹94,042** crores)
- Deposits grew by **12.53%** on YoY basis, deposits has increased to **₹56,707** crores (PY **₹50,392** crores)
- The Bank's CASA has increased to **₹15,847** crores (PY **₹13,788** crores) with a growth rate of **14.94%** on YoY basis
- The advance level of the Bank has increased to **₹50,763** crores with a growth rate of **16.30%** on YoY basis.

**(₹ in Crores)**

| Parameters | Q3FY25 | Q3FY26 | Growth – YoY % |
|---|---|---|---|
| CASA | 13,788 | 15,847 | 14.94% |
| Total Deposits | 50,392 | 56,707 | 12.53% |
| Retail, Agri & MSME (RAM) | 40,329 | 47,706 | 18.29% |
| Total Advances | 43,650 | 50,763 | 16.30% |
| Total Business | 94,042 | 1,07,470 | 14.28% |
| Gross NPA(%) | 1.32% | 0.91% | -41 bps |
| Net NPA(%) | 0.41% | 0.20% | -21 bps |
| Networth | 8715 | 9774 | 12.15% |
| CRAR (%) | 29.35% | 30.08% | 73 bps |
| Book Value (₹) | 550.38 | 617.22 | 12.14% |
| EPS (₹) (Not Annualised) | 18.96 | 21.57 | 13.77% |

- Net profit has surged to **₹342** crore from **₹300** crore, up by **14%.**
- Operating profit has surged to **₹468** crore from **₹408** crore, up by **15%**
- Net NPA has decreased to **0.20%** from **0.41%,** improved by **21 bps.**
- Gross NPA has decreased to **0.91%** from **1.32%,** improved by **41 bps.**
- PCR (without technical written off) has increased to **78.35%** from **69.07%**
- Total SMA to Gross Advances has reduced to **2.24%** from **3.77%**, came down by **153 bps.**
- The CRAR % has increased to **30.08%** from **29.35%,** improved by **73 bps.**
- Book value of share has increased to **₹617.22** from **₹550.38**
- The Net Interest Income is at **₹646.14** Crores for the quarter Q3FY26 as against **₹570.39** Crore for Q3FY25 registering a growth rate of **13.28%**.
- Net Interest Margin(NIM) has increased to **4.04%** from **4.00%,** improved by **4 bps.**
- Return on Asset at **1.97%** & Return on Equity at **14.22%** (PY 1.89% and 14.44% respectively)
- The Bank's Networth has increased to **₹9774** crores (PY **₹8715** crores) with an absolute rise of **₹1059** crores registering a growth rate of **12.15%**.
- The RAM segment has increased to **93.98%** for Q3FY26 as against **92.39%** for Q3FY25.

## New Branch Opening

- The Bank opened **12** New Branches during Q3FY26

**New Initiatives / Developments:**

During the quarter, the Bank has undertaken several strategic initiatives and technology-driven developments aimed at enhancing customer experience, strengthening operational efficiency, and expanding service offerings. Key initiatives include:

- **Workflow Automation** has been completed through the implementation of an internal **Online Approval System for the requests of the Branch / Region**, resulting in improved operational efficiency and stronger governance.
- A **state-of-the-art Call Centre with AI calling facility** has been established to enhance customer service and support capabilities.
- **New Loan Origination System (LOS) and Loan Management System (LMS)** applications have been implemented, with Phase I successfully completed.
- **Activation of Dormant Accounts through V-CIP** has been enabled, allowing customers to conveniently reactivate their accounts through Video-based Customer Identification Process without visiting branches.
- **Revisions in cooling period and transaction limits for Internet Banking** have been implemented to enhance user experience while strengthening security controls.
- **Online collection of EPF payments through Net Banking** has been enabled, allowing employers and customers to make EPF payments seamlessly and efficiently.

These initiatives demonstrate the Bank’s continued commitment to innovation, digital transformation, and customer-centric growth.

The Bank remains committed to delivering value to its stakeholders.

Regd. Office
57, V.E. Road,
Thoothukudi - 628002

# தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிட்.,

## தலைமை அலுவலகம், தூத்துக்குடி

## பத்திரிக்கைப் பிரசுரம்

நாள் : 04.02.2026
இடம் : தூத்துக்குடி

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் மூன்றாம் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை 2025-26 (Q3)**

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு, 1921 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வரும் பாரம்பரியமிக்க தனியார் துறை வங்கியாகும். வங்கியானது தனது வரலாற்றில் தொடர்ந்து 104 வருடங்களாக இலாபம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

வங்கியானது 614 கிளைகள் (as on 31.01.2026) மற்றும் 12 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டின் 17 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் தனது விரிவாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு ஏறத்தாழ 5.3 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது.

04.02.2026 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் 2025-26 மூன்றாம் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் இறுதி செய்யப்பட்டது. வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி உயர்திரு. சலீ எஸ் நாயர் அவர்கள் தணிக்கை செய்யப்படாத மூன்றாம் காலாண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை வெளியிட்டார். Executive Director, தலைமை நிதி அதிகாரி, Executive Vice President மற்றும் மூத்த அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

**வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி உயர்திரு. சலீ எஸ் நாயர் அவர்கள் விளக்கியதாவது:**

நீண்டகால திறன் உருவாக்கமும் அளவோடு விரிவடையும் வளர்ச்சியும் மையமாகக் கொண்ட ஆண்டில், Q3 FY26 காலாண்டில் எங்களின் செயல்திறன், நாங்கள் மேற்கொண்டு வரும் முன்னேற்றத்தை தெளிவாக பிரதிபலிக்கிறது. கடன் வழங்கல் (Advances) மற்றும் வைப்பு தொகைகளில் (Deposits) ஆரோக்கியமான வளர்ச்சியை வங்கி பதிவு செய்துள்ளது. அதே நேரத்தில், இலாபத்தன்மையில் நிலைத்தன்மையும், சொத்து தரத்தில் (Asset Quality) தொடர்ந்த வலிமையும் காணப்படுகின்றன; இது நிறுவனமெங்கும் ஒழுங்குமுறைப்பட்ட செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது.

MSME (சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள்) கடன் வழங்கல் எங்களுக்கான முக்கிய வளர்ச்சி இயக்கியாகத் தொடர்கிறது. இந்த காலாண்டில், வர்த்தக சார்ந்த மற்றும் உற்பத்தி மையங்களை அடிப்படையாகக் கொண்ட வலுவான

ஈடுபாட்டின் மூலம் MSME கடன் வளர்ச்சியில் மேம்பட்ட வேகத்தை காண்கிறோம். அமெரிக்கா–இந்தியா வர்த்தக ஒத்துழைப்பு தொடர்பான சமீபத்திய முன்னேற்றங்கள், குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த MSME நிறுவனங்களுக்கு சாதகமாக உள்ளன. ஜவுளி, பொறியியல் மற்றும் மின்னணு போன்ற துறைகளில் தமிழ்நாடு வலுவான இருப்பைக் கொண்டுள்ளதால், இத்துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு இது கூடுதல் வாய்ப்புகளை உருவாக்குகிறது.

இந்த நிறுவனங்களிடமிருந்து நடப்பு மூலதனம் (Working Capital), வர்த்தக நிதி (Trade Finance) மற்றும் வெளிநாட்டு நாணய (Forex) தீர்வுகளுக்கான தேவை மேம்படத் தொடங்கியதற்கான ஆரம்ப அறிகுறிகளை நாங்கள் காண்கிறோம்.

எங்களின் தொடர்ச்சியான தொழில்நுட்ப மாற்ற முயற்சிகள் தற்போது செயல்பாட்டு பலன்களாக மாறத் தொடங்கியுள்ளன. மேம்பட்ட டிஜிட்டல் கடன் தளங்கள் மற்றும் Oracle அடிப்படையிலான நிறுவன அமைப்புகள் உள்ளிட்ட எண்டர்பிரைஸ் தீர்வுகளின் ஒருங்கிணைப்பு, செயல்முறை நேரத்தைக் குறைத்து, ஆபத்து மதிப்பீடு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதுடன், வாடிக்கையாளர் அனுபவத்தையும் சிறப்பாக்கி வருகிறது.

நிலையான கடன் வளர்ச்சி, MSME வாடிக்கையாளர் உறவுகளை மேலும் ஆழப்படுத்துதல், செயல்பாட்டு திறனை (Operating Leverage) மேம்படுத்துதல் மற்றும் மூலதனத்தை திறம்பட பயன்படுத்துதல் என்பவற்றிலேயே எங்களின் கவனம் வரும் காலங்களில் தொடரும். இதன் மூலம், நிதியாண்டு 2027இல் மாற்றத்திற்கான கட்டத்திலிருந்து வலுவான வளர்ச்சி சுழற்சிக்குள் நாங்கள் நகர்வோம்"

அனைத்து அடிப்படை அளவீடுகளிலும் வங்கி தொடர்ந்து வலுவான செயல்திறனை வெளிப்படுத்தி வருகிறது.

## வங்கி வளர்ச்சியின் சிறப்பம்சங்கள் (Year on Year)

- மொத்த வணிகம் (**Total Business)** ஆண்டு அடிப்படையில் (**YoY) 14.28%** வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் மூலம்**,** மொத்த வணிக அளவு **₹1,07,470** கோடியாக உயர்ந்துள்ளது (முந்தைய ஆண்டு: **₹94,042** கோடி).
- வைப்புத் தொகைகள் (**Deposits)** ஆண்டு அடிப்படையில் (**YoY) 12.53%** வளர்ச்சி பெற்றுள்ளன. இதன் மூலம்**,** வைப்புத் தொகை அளவு ₹**56**,**707** கோடியாக உயர்ந்துள்ளது (முந்தைய ஆண்டு: ₹**50**,**392** கோடி).
- வங்கியின் **CASA (Current Account & Savings Bank Account)** வைப்பு தொகை ஆண்டு அடிப்படையில் (**YoY) 14.94%** வளர்ச்சியுடன் **₹15,847** கோடியாக உயர்ந்துள்ளது (முந்தைய ஆண்டு: **₹13,788** கோடி).
- வங்கியின் கடன் வழங்கல் அளவு (Advances) ஆண்டு அடிப்படையில் (YoY) **16.30%** வளர்ச்சியுடன் **₹50,763** கோடியாக உயர்ந்துள்ளது.

(₹ in Crores)

| Parameters | Q3FY25 | Q3FY26 | Growth – YoY % |
|---|---|---|---|
| CASA | 13,788 | 15,847 | 14.94% |
| Total Deposits | 50,392 | 56,707 | 12.53% |
| Retail, Agri & MSME (RAM) | 40,329 | 47,706 | 18.29% |
| Total Advances | 43,650 | 50,763 | 16.30% |
| Total Business | 94,042 | 1,07,470 | 14.28% |
| Gross NPA(%) | 1.32% | 0.91% | -41 bps |
| Net NPA(%) | 0.41% | 0.20% | -21 bps |
| Networth | 8715 | 9774 | 12.15% |
| CRAR (%) | 29.35% | 30.08% | 73 Bps |
| Book Value (₹) | 550.38 | 617.22 | 12.14% |
| EPS (₹) (Not Annualised) | 18.96 | 21.57 | 13.77% |

- நிகர இலாபம் **14%** அதிகரித்து **₹300** கோடியிலிருந்து **₹342** கோடியாக உயர்ந்துள்ளது.
- செயல்பாட்டு இலாபம் (Operating Profit) **₹408** கோடியிலிருந்து **₹468** கோடியாக உயர்ந்து, **15%** வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.
- நிகர NPA (Net NPA) **0.41%** இலிருந்து **0.20%** ஆக குறைந்து, 21 அடிப்படை புள்ளிகள் (bps) மேம்பாட்டை பதிவு செய்துள்ளது.
- மொத்த NPA (Gross NPA) **1.32%** இலிருந்து **0.91%** ஆக குறைந்து, 41 அடிப்படை புள்ளிகள் (bps) முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.
- PCR (without technical written off) **69.07%** இலிருந்து **78.35%** ஆக உயர்ந்துள்ளது.
- மொத்த கடன் தொகையில் SMA ஆனது **3.77%** இலிருந்து **2.24%** ஆக குறைந்துள்ளது, **153 bps** முன்னேற்றம் காணப்பட்டுள்ளது
- CRAR **29.35%** இலிருந்து **30.08%** ஆக அதிகரித்துள்ளது, **73 bps** மேம்படுத்தப்பட்டுள்ளது.
- பங்கின் புத்தக மதிப்பு **₹550.38** இல் இருந்து **₹617.22** ஆக அதிகரித்துள்ளது
- நிகர வட்டி வருமானம் ₹**646.14** கோடியாக உள்ளது. (முந்தைய ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ₹**570.39** கோடியாக இருந்தது.) இது **13.28**% வளர்ச்சியாகும்.
- நிகர வட்டி வரம்பு (Net Interest Margin – NIM) **4.00%** இலிருந்து **4.04%** ஆக உயர்ந்து, **4** அடிப்படை புள்ளிகள் (bps) மேம்பாட்டை பதிவு செய்துள்ளது
- Return on Assets(ROA) **1.97%** ஆகவும், Return on Equity (ROE) **14.22%** ஆகவும் உள்ளது. *(முந்தைய ஆண்டின் மூன்றாம் காலாண்டில்: ROA – 1.89%, ROE – 14.44%).*
- நிகரமதிப்பு (Networth) **₹9,744** கோடியாக உயர்ந்துள்ளது. (முந்தைய மூன்றாம் காலாண்டில் **₹8,715** கோடியாக இருந்தது) இது **₹1059** கோடி உயர்ந்து **12.15 %** வளர்ச்சி அடைந்துள்ளது.
- RAM (சில்லரை, விவசாயம் மற்றும் சிறுகுறு நடுத்தர நிறுவனங்கள்) **92.39%** யிலிருந்து **93.98%** யாக உயர்ந்துள்ளது.

## புதிய கிளை திறப்பு:

- வங்கியானது இந்த காலாண்டில் 12 புதிய கிளைகளை துவக்கியுள்ளது.

**புதிய முயற்சிகள் / மாற்றங்கள்:**

இந்த காலாண்டில், வங்கி வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், செயல்திறனை வலுப்படுத்தவும், சேவை அளிப்புகளை விரிவுபடுத்தவும் பல துரிதமான முயற்சிகளையும் தொழில்நுட்ப சார்ந்த முன்னேற்றங்களையும் மேற்கொண்டுள்ளது.

- **பணிப்பாய்வு தானியக்கம் (Workflow Automation):** கிளை மற்றும் மண்டலங்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண 'உள்ளக இணையவழி ஒப்புதல் அமைப்பு' (Internal Online Approval System) செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் செயல்பாட்டுத் திறன் மேம்படுத்தப்பட்டு, நிர்வாகக் கட்டுப்பாடுகள் (Governance) வலுப்படுத்தப்பட்டுள்ளன.
- **அழைப்பு மையம் (Call Centre):** வாடிக்கையாளர் சேவை மற்றும் ஆதரவை மேம்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு (AI) அழைப்பு வசதியுடன் கூடிய அதிநவீன அழைப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.
- **கடன் மேலாண்மை அமைப்புகள் (LOS & LMS):** புதிய கடன் தொடக்க அமைப்பு (Loan Origination System) மற்றும் கடன் மேலாண்மை அமைப்பு (Loan Management System) செயலிகள் அமல்படுத்தப்பட்டு, அதன் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- **செயலற்ற கணக்குகளைப் புதுப்பித்தல்:** வாடிக்கையாளர்கள் வங்கிப் கிளைகளுக்கு நேரில் செல்லாமலேயே, 'காணொளி வாயிலான வாடிக்கையாளர் அடையாளச் செயல்முறை' (V-CIP) மூலம், தங்களின் செயலற்ற கணக்குகளை (Dormant Accounts) எளிதாகப் புதுப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- **இணைய வங்கிச் சேவை மாற்றங்கள்:** இணைய வங்கிச் சேவையில் (Internet Banking) பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதே வேளையில், பயனர் அனுபவத்தை மேம்படுத்தும் விதமாக 'காத்திருப்பு காலம்' (Cooling period) மற்றும் பணப்பரிவர்த்தனை வரம்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
- **இணையவழி EPF செலுத்துதல்:** நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வருங்கால வைப்பு நிதியை (EPF) தடையின்றியும் திறம்படவும் செலுத்தும் வகையில், இணைய வங்கிச் சேவை (Net Banking) மூலம் பணம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகள் வங்கியின் புதுமை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கான தொடர்ந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன.

வங்கியின் பங்குதாரர்களுக்கு மதிப்பை வழங்குவதில் வங்கி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.